வரலாற்றில் இல்லாத அளவுக்கு மருத்துவ பட்டதாரிகள் பலரை மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதலமைச்சர் அவர்கள் சட்டமன்ற உறுப்பினர்களாக ஆக்கியிருக்கிறார்கள். நீங்கள் ஆய்வு செய்வதற்கு நாட்கள் ஆகும். இங்கே நாங்களே பலர் பட்டியலை தர தயாராக இருக்கிறோம். அந்தப் பட்டியலைத் தந்தால் இதன் மீது நடவடிக்கை எடுக்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பட்டியலை வாங்கிச் செய்வதிலே பல பிரச்சினைகள் ஏற்பட்டு விடக் கூடாது என்ற காரணத்தால் தான் முறையாக இதை ஆய்வு செய்ய வேண்டுமென்று நான் தெரிவித்தேன். இங்கே சித்தா படித்த டாக்டர்களும் வந்திருக்கிறார்கள்; ஓமியோபதி படித்த டாக்டர்களும் வந்திருக்கிறார்கள். இப்படி மாறி மாறி எல்லோரும் இங்கே இருக்கின்ற காரணத்தால் தான் கொஞ்சம் தெளிவாகவும், கொஞ்சம் ஜாக்கிரதையாகவும் பதில் சொல்ல வேண்டிய அவசியம் இருக்கிறது. எனவே, போலி மருத்துவர்கள் யார் என்பதை இந்த அரசு நிச்சயமாக கண்டுபிடித்து அதை தடுப்பதற்கு கடுமையான நடவடிக்கையை மேற் கொள்ளும் என்ற உத்திரவாதத்தை மட்டும் இந்த நேரத்தில் நான் தருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 30, டாக்டர் தே. குமாரதாஸ், மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

கிள்ளியூர் மீனவர்களுக்கு தூண்டில் வளைவுகள்.

30—

*204—டாக்டர் தே. குமாரதாஸ்:

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) கிள்ளியூர் தொகுதிக்குட்பட்ட கடற்கரைப் பகுதிகளில் ஆண்டுதோறும் ஜூன் மாதம் முதல் டிசம்பர் மாதம் வரை கடல் கொந்தளிப்பு ஏற்பட்டு மீனவர்கள் தொழிலுக்கு பாதிப்பு ஏற்படுவது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், தூண்டில் வளைவுகள் அமைக்க வேண்டும் என்ற மீனவர்களின் கோரிக்கையை உடனடியாக அரசு நிறைவேற்றிக் கொடுக்குமா?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) இதற்கான செயற்குறிப்பு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

முற்பகல் 10.50

டாக்டர் தே. குமாரதாஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களே 6 மாதகாலமாக மீன்பிடி தொழிலுக்குச் செல்ல முடியாத ஒரு சூழ்நிலை இருப்பதை ஒத்துக் கொண்டிருக்கிறார்கள். வெகுகாலமாக, அந்தப் பகுதி மக்கள், இந்த 6 மாதங்களில் தமிழ்நாட்டிலேயிருந்து கேரளாவுக்குச் செல்லக் கூடிய சூழ்நிலை ஏற்படுகிறது. தமிழ்நாட்டிலேயிருந்து வந்து அதிகமாக மீன் பிடித்துச் செல்கிறார்கள் என்கிற காழ்ப்புணர்வின் அடிப்படையில் ஆண்டுதோறும் இந்த லா அண்டு ஆர்டர் பிராப்ளம் வந்து கொண்டு இருக்கிறது. அதைத் தவிர்க்கின்ற விதத்தில் இந்தத் தூண்டில் வளவை நீங்கள் அமைத்துத்தர முன் வருவீர்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடல் கொந்தளிப்பு ஏற்படுவதால் கன்னியாகுமரி மாவட்டம் கிள்ளியூர் தொகுதியிலுள்ள கடற்கரைப் பகுதியில் கடல் அரிப்பு ஏற்படுகிறது. அதனால் ஏற்படுகின்ற விளைவுகள் நமக்கு நன்றாகத் தெரியும். இதனால் மீனவர்களுக்கும், மீன் பிடிக்கின்ற தொழிலுக்கும் பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது என்பதையும் அரசு நன்றாக அறியும். இருந்தாலும் நடைமுறையிலே சில பிரச்சினைகள் இருக்கின்றன. அதை இந்த அவையின் கவனத்திற்குக் கொண்டு வருவது என்னுடைய கடமை என்று கருதுகின்றேன். கடல் அரிப்பினைத் தடுப்பதற்கு, கடல் அரிப்பு தடுப்புச் சுவர் ஒன்று கட்டுவதற்கு அந்தப் பகுதியிலே ஏற்பாடு செய்யலாம் என்று முடிவெடுத்து, அதைச் செயல்படுத்துகின்ற நேரத்திலே, மீன்பிடி படகுகள் போவதற்குத் தடையாக இருக்கிறது என்று சொல்லி அதற்கு மீனவர்கள் எதிர்ப்பு தெரிவித்த நேரத்திலே, பொதுப்பணித்துறையினரால் செயல்படுத்தப்பட விருந்த திட்டம் கைவிடப்பட்டது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், மீன்பிடி வளைவுகள் ஏற்படுத்துவது பற்றி சொன்னார்கள். அதை ஏற்படுத்துகின்ற நேரத்திலே அதற்கு ஆகின்ற செலவினை நாம் பார்க்கின்றபோது ஒரு சிறிய மீன்பிடி துறைமுகம் கட்டுவதற்கு ஆகின்ற செலவைவிட கொஞ்சம் அதிகமாக இருக்கின்ற அளவிற்கு மதிப்பீடுகளெல்லாம் தயார் செய்யப்படுகின்றன. ஆகவே, அந்த அளவிற்கு செலவு செய்து ஏற்படுத்துகின்ற திட்டம் இந்த அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தான் நான் ஏற்கனவே சொல்லி இருக்கின்றேன். ஆகவே, செலவினம் அதிகமாக இருக்கின்ற காரணத்தினாலே, அந்தத் திட்டம் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

டாக்டர் தே. குமாரதாஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது அரசைப் பொறுத்தவரைக்கும் பலகோடி ரூபாய்களை துச்சமென மதித்து மக்களுக்கு தொண்டாற்றவேண்டுமென்ற அடிப்படையில் செயல்பட்டுவருகிறது.

1991 செப்டம்பர் 14] [டாக்டர் தே. குமாரதாஸ்]

குறைந்த பட்சம் 50 ஆயிரத்துக்கும் மேற்பட்ட குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் இப்படி 6 மாத காலமாக மிகவும் பட்டினிப் போரில் வாழக்கூடிய சூழ்நிலை இருக்கின்ற காரணத்தினாலே அரசு தனியாக அவர்கள் மேல் இரக்கம் கொண்டு, ஒரு வேளை இதற்கு 2, 3 கோடி ரூபாய் செலவாகக் கூடும், இருந்தாலும் அதை நீங்கள் பொருட்படுத்தாமல், புரட்சித் தலைவர் அவர்கள் இருந்த காலத்தில் கூட மீனவர்களுக்காக நல்லபல திட்டங்களை அறிவித்து செயல்படுத்தினார்கள். அதை நீங்களும் கருத்தில் கொண்டு, அவர்களுக்கு, இந்தச் செலவை பார்க்காமல், ஒரு சிறிய தூண்டில் வளைவை ஏற்படுத்தித் தரவேண்டும். கேரளாவிலே நறைய பகுதிகளிலே இப்படி அமைத்துக் கொடுத்து இருக்கிறார்கள். அங்கே மீன்களும் அதிகமாகக் கிடைக்கின்ற சூழ்நிலை இருக்கிறது. அதைப் போல நீங்களும் அந்தத் தொகுதியை தத்து எடுத்துக் கொள்ள வேண்டும். எனவே, அந்தத் தூண்டில் வளைவை அமைத்துத்தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன் வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்:</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை கவனத்தோடு இந்த அரசு பரிசீலித்து அதற்கான தக்க நடவடிக்கையை எடுக்கும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 31. திருமதி இரா. பாண்டியம்மாள், மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

<u>பெரியார் அணை மேம்பாட்டுத் திட்டம்.</u>

31—

*266—<u>திருமதி இரா. பாண்டியம்மாள்:</u>

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா ;

மதுரை மாவட்டம் உசிலம்பட்டியில் பெரியார் அணை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 58 கிராமப் புதிய கால்வாய்த் திட்டம் எந்த நிலையில் உள்ளது?

<u>மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்:</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

உலக வங்கி ஒப்புதலளித்த இணைப்புக் கால்வாய்த் திட்டம் ரூ. 25 கோடி செலவில் எடுத்துக் கொள்ளப்பட்டதால் உசிலம்பட்டியில் 58 கிராம கால்வாய்த் திட்டம் அரசால் கைவிடப்பட்டது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.